991

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்.

Editor & Publisher:

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

கோத் 15 டிசம்பர் 1940 மலர் 6

JC
ம211,N11PP·
N40·31,6.
182295

றை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

தனிப்பிரதி அணா 1¼.

BODHANA VISHAYA POONGOTHU

Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள் ...	... 161
2.	சென்னை கல்வி இலாகா திருத்த விதிகள்	... 163
3.	மனோசாஸ்திரமும் ஆசிரியரும் ...	... 165
4.	ஆரம்ப இலக்கணம்	... 167
5.	கிராமக் குடிசைக் கைத்தொழில் ...	... 170
6.	பாடக் குறிப்பு	... 172
7.	விடுகதைப் பகுதி	... 175
8.	காற்றோட்டமில்லாத பாடசாலை ...	... 176
9.	சிறுவர்களுக்கான கதைகள் ...	... 179
10.	பெற்றோர் சங்கத் திறப்பு விழா ...	... 181
11.	உழவின் பெருமை	... 182
12.	தேனீ வளர்த்தல்	... 183
13.	யோசனைவிருத்திச் செய்யுளின் விடை	... 186
14.	ஜுரமுள்ளவனுக்கு ஆகாரம் ...	... 187
15.	கதைப் பாட்டு	... 188
16.	சாரணரது கூடாரவாசம் ...	... 189
17.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள் ...	... 191

Imprimatur : ✠ JAMES,
Bishop of Trichinopoly.

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

Editor & Publisher :
"BODHANA VISHAYA POONGOTHU" Trichinopoly.

எஜெண்டுகள் தேவை ! எஜெண்டுகள் தேவை !!

SUPERIOR

School Chalk Crayons!



BUY INDIAN !

SUPPORT INDIAN INDUSTRY !

BEST QUALITY, DURABLE,

SMOOTH & STRONG ! !

THE STANDARD CHALK CO.,

Old Post Office Road,

CANTONMENT, TRICHINOPOLY.

Suppliers of

White & Coloured Chalk Crayons.

PATRONISED BY

MANY HIGH SCHOOLS, COLLEGES

AND PUBLIC INSTITUTIONS.

A trial order will convince you.

Patronise Indian Industry.

†

ஆப்டோன் & லையன்
எங்கிரேவிங் பிளாக்குகள்,
ரப்பர் ஸ்டாம்புகள்,
சினிமா ஸ்லைடுகள்,
சினிமா திரைகள்,
விளம்பர போர்டுகள்,
ஆயில் பெயிண்ட்டிங்,
என்லார்ஜ்மெண்டுகள்
முதலியன செய்யுமிடம்:

தங்க மெடல்கள் பரிசுபெற்ற

நகர சித்திர சாலை

மலைவாசல், திருச்சி.

வீனஸ் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்:

வீனஸ் பில்டிங்ஸ், டில்லி ஸ்தாபிதம் 1920

வீனஸ் மொத்த பாலிஸிகள் உரிமைத் தொகை ரூ. 4,50,00,000

போனஸ் ரூ. 1000 க்கு ரூ. 15, 12 வீதம் கடந்த 5 வருஷங்களுக்கு ஜீவிய பாலிஸிகளுக்கு ரூ. 75, என்டௌமென்ட் பாலிஸிகளுக்கு ரூ. 60.

கவர்மென்டாரிடம் செக்யூரட்டி பூராவும் கட்டப்பட்டுள்ள தொகை ரூ. 2,00,000

ஜீவிய சேமிப்பு ... ... ரூ. 8,00,000

உரிமைத் தொகை ... ... ரூ. 18,00,000

சிக்கனமிக்க நிர்வாகம்! திறமையான மேற்பார்வை!!

நீங்கள் இன்ஷூர் செய்துவிட்டீர்களோ?
இல்லையேல் இன்றே இந்த சுதேசி கம்பெனியில் வீனஸ்
பாலிஸிதாரராய் சேருங்கள்!

அனுபவமும் செல்வாக்குமுள்ள ஏஜண்டுகள் தேவை:

விபரங்களுக்கு:— சூப்பரின்டென்டென்ட்,
ஆனைக்கட்டி மேட்டுத் தெரு,
வீனஸ் ஆபீஸ், பீமநகர், திருச்சினாப்பள்ளி.

ST. JOSEPH'S I. S. PRESS, TRICHINOPOLY

OUR OWN PRODUCTIONS.

Xmas & New Year Cards

WITH ENVELOPES TO MATCH

CHEAP & UP-TO-DATE

SUITED TO ALL TASTES & POCKETS

MADRAS 16 DEC 1940

SINGLE CARD SERIES

Ivory white Single Cards—different sizes and designs with Christmas and New Year Greetings printed in plain characters.

Plain edges	doz. Re.	0—5—6.	each	6 pies.
Deckled edges	,, ,,	0—8—0.	,,	9 pies.
Embossed or Virkotyped	,, ,,	0—11—0.	,,	1 Anna.

FOLDED SHEET SERIES

Folded Sheets—In white, grey or blue colour—with words of greetings printed in relief as well as in plain characters.

In different Sizes—simple but effective.

Re. 0—5—6 per doz. each 6 pies.

FOLDED CARD SERIES

Folded White Cards—with deckled edges—designs simple and attractive—artistically floral emboss—colours delicately ærographed—Christmas and New Year Greetings printed in centre.

11 As. per doz. 1 Anna each.

VISITING CARD SERIES

In various sizes and variety of designs—surface: plate-sunk or plain—with or without deckled edges—colours—tastefully die-stamped or attractively ærographed—words of greetings suitable for Xmas and New Year in relief characters.

11 As. per doz. 1 Anna each.

ENVELOPE SERIES

N.B.—No separate envelope is needed.

Fancy shape—Designs plain and attractive—colours delicate and in harmony—Appropriate words of greetings suitable for Xmas & New Year.

11 As. per doz. 1 Anna each.

AUTO SERIES

Folded sheets—with words of greetings printed in relief in script characters—Deckled edges.

14 As. per doz. 1 Anna 3 Pies each.

RIBBONED SERIES

Cards of superior quality and make—Die stamped or embossed—edges plain or deckled tinted with bright gold or ærographed with agreeable colours—interleaved and silk ribboned in various sizes.

Re. 1—6—0 per doz. 2 Annas each.

THE NEW SERIES

Folded sheets and Cards—beautiful pictures of scenery printed on the front in bright gold—with Xmas and New Year Greetings.

Prices varying from Re. 0—14—0 to Rs. 1—8—0 per doz.

NEW YEAR CHEQUE BOOK

(without envelopes)

containing 12 leaves each, printed in tasteful colours with an elegant get-up.

Per Book Re. 0—6—0 Single Sheet 6 Pies.

Please Apply to:

The Superintendent, St. Joseph's I. S. Press, Trichinopoly.

N.B.—Please state a second choice in case cards ordered are exhausted.

SPIRITUAL THESAURUS

Popular Prayer Book—besides all prayers and devotions it contains the following important subjects: Vocation, Preparation for Death, Meditation, Reflections for Every Day in the month and a Christian's Rule of Life.

Breviary size 8th ed. 440 pp.

Cloth board bind—Price ... ... **Re. 1–14—0**

Morocco leather bind—Price ... ... **Rs. 2–12—0**

Postage As. 3—3.

போதனா விஷயப் பூங்கொத்து

கோத்து 31] 15 டிசம்பர் 1940 [மலர் 6

பத்திராதிபர் குறிப்புகள்

பூங்கொத்தும் திருச்சி ஜில்லா கல்வி அதிகாரியின் (D. E. O.) சுற்றறிக்கையும்

திருச்சினாப்பள்ளி ஜில்லா கல்வி அதிகாரியவர்கள் கீழ்வரும் சுற்றறிக்கையை இந்த ஜில்லாவிலுள்ள உயர்தரப் பாடசாலை, போதனாமுறைப் பாடசாலைத் தலைமையாசிரியர்கட்கும், அந்தந்த ரேஞ்சு டெப்யூடி இன்ஸ்பெக்டர்களுக்கும் (Deputy Inspectors) அனுப்பியுள்ளார்கள். [Vide P. I. No. 35/40 dated 5-11-'40, Office of the District Educational Officer, Trichinopoly.]

“திருச்சினாப்பள்ளி, R. C. Secondary போதனாமுறைப் பாடசாலையினின்று Rev. Fr. A. Lourduswami, B.A., L.T. அவர்களால் பிரசுரிக்கப்படும் “போதனா விஷயப் பூங்கொத்து” (வருஷ சந்தா—ரூபாய் ஒன்று) என்னும் மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிகையை இந்த ஜில்லாவிலுள்ள எல்லா புத்தக நிலையங்கள் (Libraries) வாசகசாலைகள் (Reading Rooms) முதலிய கல்வி ஸ்தாபனங்களில் தருவித்து வைக்கப்படுதல் மிகவும் பயனளிக்கத்தக்கதாகும்,” என்று சிபார்சு செய்துள்ளனர்.

182295

இங்ஙனம் ஷை கல்வி அதிகாரியவர்கள் சிபார்சு செய்திருப் பதை நாம் வெகுவாய்ப் பாராட்டுவதுடன் எமது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இச்சந்தர்ப்பத்தில் இவ்வாறே ஏனைய ஜில்லா கல்வி அதிகாரிகளும் நமது "பூங்கொத்தின்" பயனை இன்னும் பலர் அடையுமாறு தங்களால் கூடுமானவற்றைச் செய்வார்களானால் நமது தமிழ்நாட்டு ஆரம்ப ஆசிரியர்கள் பலர் தங்கள் தொழில் முறையில் இன்னும் வெகுவாய் முன்னேற்றமடைய ஏதுவாகுமென்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

பாலர் பாக்கள்

(S. Krishnaveni.)

அவயவப் பாட்டு

(கட்டப்பொம்மு இசை.)

கண்களினாலேநாம் பார்த்திடலாம்
காதுகளால்சப்தம் கேட்டிடலாம்
வாயினால் பேசலாம், சாப்பிடலாம்
வாசம் தெரியலாம் நாசியினால்
மனத்தினால் எதையும் நினைத்திடலாம்
மற்றும் கல்விச்செல்வம் வைத்திடலாம்
கால்களினாலே நடந்திடலாம்
கைகளால் வேலைகள் செய்திடலாம்
உடலின் உறுப்புக்கள் இந்தவிதம்
உடலுக்காய் உழைப்பதைக் கண்டுகொள்ளே. (கண்)

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182295

சென்னை கல்வி இலாகா திருத்த விதிகள்

Amendments to the Madras Educational Rules

[G. O. No. 1871 dated 25-9-1940.]

138-ம் விதியின் 4-வது பாரா பின்வருமாறு திருத்தப்பட்டிருக்கிறது :—

எலிமெண்டரி லோவர் கிரேடு பயின்று, பரீட்சை எழுதித் தேறி, லோவர் கிரேடு ஸர்ட்டிபிக்கேட் பெற்றுள்ள ஆசிரியர்கள், "**1943**-ம் வருஷம் வரையில்" ஹையர் எலிமெண்டரி பரீட்சை எழுதித் தேறி (ஹையர் கிரேடு ட்ரெயினிங் இல்லாமலே) ஹையர் கிரேடு ஸர்ட்டிபிக்கேட் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த ஷை திருத்தவிதியின் கருத்து என்னவெனில் **1943**-ம் வருஷத்திற்குப்பிறகு லோவர் எலிமெண்டரி ஆசிரியர்கள், ஹையர் எலிமெண்டரி பரீட்சை எழுதி, ஹையர் கிரேடு உபாத்தியாயராக மாற்றிக்கொள்ள முடியாதென்பதே. அதாவது லோவர் கிரேடு ஆசிரியர்களுக்கு 1943-ம் வருஷத்திற்குப் பிறகு ஹையர் கிரேடுக்கு மாற்றிக்கொள்ள ஹையர் கிரேடு பரீட்சை நிறுத்தப்பட்டுவிடுமென்பதே.

ஷை விதியின் 5-வது பாரா நீக்கப்பட்டுவிட்டது. அதாவது: ஹையர் எலிமெண்டரி கிரேடு தேறிய ஸர்ட்டிபிக்கேட் வைத்திருப்பவர்கள் S. S. L. C. பரீட்சைபோன்ற உயர்தரப் பரீட்சை எழுதித் தேறி, ஸெக்கண்டரி கிரேடு போதனுமுறைப் பயிற்சி பெறுமலே, ஜில்லா கல்வி அதிகாரியின் சிபார்சின்பேரில் ஸெக்கண்டரி கிரேடு ஸர்ட்டிபிக்கேட்டு பெற்றுக்கொள்ளலாம் என்ற விதி இதுமுதல் எடுபட்டுப்போய்விட்டது.

ஆகவே இனிமேலாக ஹையர் கிரேடு ஆசிரியர்கள் ஸெக்கண்டரி கிரேடு ஆசிரியர்களாகவேண்டுமானுல் அதற்கு வேண்டிய ஷை உயர்தரப் படிப்புடன் ஸெக்கண்டரி ட்ரெயினிங் 2 வருஷம் பயிலவேண்டியவராவார்கள்.

T. S. L. C. பரீட்சைக்குப் புதுக்கட்டண வீதங்கள்

1942-ம் ஹு மார்ச்சு மாதத்தில் நடைபெறும் T. S. L. C. பரீட்சை தொடங்கி, ஷை பரீட்சைக்குக் கீழ்வரும் புதுக் கட்டணங்கள் செலுத்திப் பரீட்சை எழுதவேண்டும்.

பரீட்சைப் பாடங்கள் எல்லாவற்றிற்கும்

செகண்டரி கிரேடு பரீட்சைக்கு ரூ. 10—0—0.
எலிமெண்டரி ,, ,, ரூ. 6—0—0.

முதல் பரீட்சையில் தவறிப்போய், பின்னால் எழுதும் ஒன்று அல்லது இரண்டு பாடங்களுக்கு —

செகண்டரி கிரேடுக்கு ரூ. 5—0—0.
எலிமெண்டரி ,, ரூ. 3—0—0.

குறிப்பு: புதுப்பாடத் திட்டத்தின்படி T. S. L. C. முதல் பரீட்சை 1942-ம் ஹு மார்ச்சு-மீ நடைபெறுமாதலின், அதற்கேற்ப புதுக்கட்டண விதங்கள் ஏற்பட்டிருக்கிறதென்பதை அறியவும்.

போதனைக்குரிய புது உபகரணங்கள்

1. பாலர் வித்யாலீலைகள் ரூ. 10—0—0

100 வசன விளையாடல்கள் அடங்கியது; சிறுபதத்திலிருந்து தொடங்கி சிறு கதைகள்வரை இளைஞர் மௌனமாகவும் உற்சாகமுடனும் பொருளறிந்தும் வாசிக்கப் பழக்குதற்கு ஏற்றது; அழகிய பெரிய இரும்புப் பெட்டியில் அடங்கியது.

2. பாலர் கணித அட்டைகள் ரூ. 1—0—0

இதில் 1 முதல் 256 வரை எண்களும், கூட்டல் கழித்தல் அட்டைகளும், பெருக்கல் வகுத்தல் அட்டைத் துண்டுகளும் உள. அழகிய அட்டைப் பெட்டியில் அடங்கியது.

3. எண் காண் கருவி ரூ. 2—8—0

மரத்தால் ஆனது. அழகிய வர்ணப்பூச்சுடையது. 1 முதல் 10 வரை அறியவும், கூட்டவும் கழிக்கவும் போதிக்கவல்லது.

கிடைக்குமிடம்: Jayam & Co.,
Publishers & Booksellers,
Nungambakkam, MADRAS.

மனோசாஸ்திரமும், ஆசிரியரும்

மனோசாஸ்திரம் என்பதை "அகநூல்" அல்லது "உள நூல்" என்றும் சொல்லலாம். குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் எப்படி ஒவ்வொருவரின் மனமும் வேலை செய்கின்றதென்பதைப்பற்றியும், மனதினுடைய முக்கிய தொழில்களைப்பற்றியும், எந்தப் பொது விதிகளுக்குட்பட்டு மனித வர்க்கத்தினரது மனம் வேலை செய்கின்றதென்பதைப் பற்றியும் தெரிவிக்கும் நூலுக்கே அகநூல் அல்லது மனோ சாஸ்திரம் என்கிறோம். இந்த மனோசாஸ்திர அறிவு ஒவ்வொரு ஆசிரியர்களிடம் கீழ்க்கண்ட காரணங்களினிமித்தம் இருத்தல் அவசியம்.

குழந்தையின் இயற்கைத் தன்மையைப்பற்றி அறிந்தவர்கள் மிகவும் கொஞ்சம் பேர். குழந்தையின் இயற்கைத் தன்மையைச் சரிவர அறியாத காரணத்தால் இளைஞர் கல்வி சம்பந்தப்பட்டவரை அநேக தப்பறையான எண்ணங்களையும் நோக்கங்களையும் பெற்று, பாலியர்களுக்குப் பெருந்தீங்கை விளைவிக்கின்றனர். இளங்குழந்தை வேறென்றும், பெரியவன் வேறென்றும் குழந்தைகளெல்லாம் சிறிய வடிவங்கொண்ட பெரியவர்கள் அல்லவென்றும், இளைஞருக்குக் கல்வி புகட்டும் ஆசிரியன் உணர்ந்திருத்தல்வேண்டும். இந்த உண்மையை யுணர்ந்திருந்தால்தான் குழந்தையின் தன்மைக்கேற்றவாறு பாடங்களைப் போதிக்கமுடியும். குழந்தையின் தேக வளர்ச்சியானது படிப் படியாய்ப் பருவத்திற்கேற்றவாறு வளர்ந்துகொண்டுபோகிற தென்றும், மனமும் கொஞ்சங்கொஞ்சமாய் விஷய அறிவைப் பெறுகின்றதென்றும் ஆசிரியர் அறியவேண்டும். ஆகையால் குழந்தையின் தன்மையை நன்கறிந்திருந்தால்தான் அதன் தன்மைக்கேற்றவாறும், அறிவு வளர்ச்சிக்கேற்றவாறும் போதனு முறைகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளமுடியும். குழந்தையைப் பற்றிய இந்த உண்மையையெல்லாம் கூறுவது மனோசாஸ்திரம்.

வெகுகாலமாய்ப் பிள்ளையின் மனம் வெறுமை அல்லது காலியானது என்றும் அம்மனதிற்குள் எவ்விதமான விஷயங்களையும் நிறப்பிவிடலாம் என்றும் அநேகர் நினைத்திருந்தனர். மனோதத்துவ சாஸ்திரம் இது உண்மையல்லவென்று தெரிவிக்கின்றது. நவீன ஆராய்ச்சியின்படி குழந்தை அமைதியாய்ச் சொல்வதைக் கேட்கும்படியான தன்மையைமாத்திரம் உடையதல்லவென்றும் அநேக கருத்துக்களையுடையதென்றும் வெளி

யிடப்பட்டிருக்கிறது. ஆகவே கல்விபுகட்டும்போது, கல்விக்கு முக்யமான ஆசிரியர், பாடத்திட்டம், குழந்தை என்ற மூன்றி னுள் மிகவும் முக்யமானது குழந்தையென்றும் அதன் பற்றிற் கேற்றவாறும் ஆற்றலுக்கேற்றவாறுமே கல்வி புகட்டவேண்டு மென்றும், மனோசாஸ்திரம் கூறுகின்றது.

கல்வி புகட்டுவதின் முக்ய நோக்கங்கள் மூன்று. நாம் புகட்டும் கல்வியானது நம் மாணவர்களைப் பிற்கால வாழ்க்கைக் குத் தயாராக்குதல்வேண்டும். அதாவது பிள்ளைகளுக்கு வேண்டிய தேவைகளை யனுசரித்து, இன்பமுண்டாகும் முறை யில் அவர்கள் சொந்த முயற்சியால் கல்வி கற்றுக்கொள்ளவேண் டும். இரண்டாவதாக நம் மாணவர்கள் கற்கும் கல்வி அவர் களை நல்லொழுக்கத்தில் ஈடுபடும்படிச் செய்யக்கூடியதாய் இருக்கவேண்டும் மூன்றாவதாக மானிஷ்யத்துவம் அல்லது மனிதலக்ஷணங்கள் நம் மாணவர்களிடத்து ஏற்படும்படிச் செய்யவேண்டும். இந்த மூன்று நோக்கங்களிலும் மிகவும் முக்யமானது மானிஷ்யத்துவம் என்பதை அடையும்படிச் செய் வதேயாகும். ஆகவே கல்வியின் எல்லா முக்ய நோக்கங்களை யும் அடையும்படிச் செய்வது மனோசாஸ்திரமே ஆனபடியால், ஒவ்வொரு ஆசிரியரும் இச்சாஸ்திரத்தைப்பற்றிப் போதிய அறிவு பெற்றிருப்பது அவசியம்.

மனோசாஸ்திர அறிவு ஒவ்வொரு ஆசிரியருக்கும் அவசியம் இருக்கவேண்டுமென்ற நோக்கம் பொருட்டுத்தான் நம் சென்னை இலாகா அதிகாரிகள் இத்தனை வருஷகாலம் இல்லாத ஒரு சீர் திருத்தத்தை போதனுமுறையில் ஏற்படுத்தியிருக்கின்றனர். இதுபரியந்தம் ஹையர்கிரேட் ஆசிரிய மாணவர்களின் பாடத் திட்டத்தில் மனோசாஸ்திரம் ஒரு பாடமாக இருக்கவில்லையென் பது யாவரும் அறிந்த விஷயமே. இதன் குறையையுணர்ந்த நம் மாகாணக் கல்வி இலாகா அதிகாரிகள் பெரும் முயற்சிகளை யெடுத்து இந்த 1940-ம் வருஷம் முதற்கொண்டு "குழந்தை யின் இயற்கைத் தன்மையும் இளைஞர் கல்வியும்" என்ற மனோ சாஸ்திரப் பாடத்தை ஒரு பாடமாக ஹையர் கிரேடில் பயிலும் மாணவர்கட்கு ஏற்படுத்தியிருக்கின்றனர். நமது மாகாணமே எல்லாத்துறைகளிலும் விசேஷமாய்க் கல்வித்துறையில் முன் னேற்றமடைந்த மாகாணமென்பது யாவரும் அறிந்த விஷயம். இம்மாகாணக் கல்வி இலாகா அதிகாரிகள், நம் இளைஞர் கல்வி யின்மட்டில் காட்டும் கவனம் பெரிதும் மெச்சத்தக்கது.

ஆரம்ப—இலக்கணம்

(ஆசிரியர், எம். எஸ். சுந்தரேச அய்யர், திண்டிவனம்.)

இரண்டாம் பகுதி

க ச த ப மிகு மிடங்கள்

1. வன்றொடர்

எழுவாய்த் தொடராயிருந்தாலும், இரண்டாம் வேற்றுமைத் தொகையாக இருந்தாலும் வன்றொடராயின் க ச த ப மிகும். உதாரணம் :—

(1) மூக்குக்கண்ணாடி.
(2) நெருப்புச் சுடுகிறது.
(3) பத்துத் திசைகள்.
(4) எடுத்துப் பார்த்தான்.
(5) சுக்குத் தின்றான்.
(6) பட்டுக் கத்தரித்தான்.

2. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

உண்ணாத, ஓடாத, செய்யாத முதலிய பெயரெச்சங்கள், ஈற்றிலுள்ள 'த' என்ற எழுத்துக் கெட்டு வருமாயின் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்களென்று பெயர் பெறும். உதாரணம் :—

(1) ஓடாக் குதிரை.
(2) படிக்காச் சிறுவன்.
(3) தெளியாத் தண்ணீர்.
(4) தேடாப் பொருள்.

3. ஆக, ஆய் என்று முடியும் சொற்களுக்குப் பின்

(1) நன்றாகக் கேட்டான்.
(2) அழகாகச் சொன்னான்.
(3) ஆழமாகத் தோண்டினான்.
(4) மெதுவாகப் பேசினான்.
(5) நேராய்க் கண்டான்.
(6) சுறுசுறுப்பாய்ச்செய்தான்.
(7) விரைவாய்த் தேடினான்.
(8) நிதானமாய்ப் பாடினான்.

4. இரண்டாம் வேற்றுமையில்

(1) கடவுளைக் கண்ட பெரியார்.
(2) தருமத்தைச் செய்த தனவான்.
(3) துணியைத் துவைத்துக் கட்டினான்.
(4) சோற்றைப் புசித்தான்.

5. இகர வீற்று வினையெச்சம்

சொல்லி, வணங்கி, வெட்டி, வாங்கி முதலிய வினை யெச்சங்கள் ‘இ’ என்ற எழுத்தில் முடிவதால் இவை இகர வீற்று வினையெச்சமெனப் பெயர் பெறும். உதாரணம் :—

(1) நக்கிக் குடித்தது.
(2) வருந்திச் சென்றான்.
(3) தேடித் திரிந்தான்.
(4) கசக்கிப் பிழிந்தான்.

6. இயல்பு உயிரீற்றுச் சொற்களுக்குப் பின்

சில மொழிகள் இறுதியில் உயிரெழுத்துக்களைக்கொண்டு முடிகின்றன. அச்சொற்களே இயல்பு உயிரீற்று மொழிகளாம். மா, பலா, வாழை முதலியன உதாரணங்களாம்.

(1) குதிரைக் குளம்பு.
(2) கொடிக் கள்ளி.
(3) பலாச் செடி.
(4) நொண்டிச் சேவல்.
(5) கீரைத் தண்டு.
(6) தேயிலைத் தோட்டம்.
(7) வாழைப் பழம்.
(8) சாரைப் பாம்பு.

7. விதி உயிரீற்றுச் சொற்களுக்குப் பின்

ஒற்றெழுத்தில் முடிகிற சில மொழிகள், ஈறு கெட்டு வருமானால் அவை விதி உயிரீற்றுச் சொற்களாம். வட்டம், மரம், துன்பம் முதலியன வட்ட, மர, துன்ப என நிற்கும். அப்பொழுது சந்தி எழுத்துக்கள் வரும். உதாரணம் :—

(1) துன்பக் கடல்.
(2) வட்டக் கிணறு.
(3) தங்கச் சரிகை.
(4) ஈயச் சட்டி.
(5) பழத் தோட்டம்.
(6) ஈனத் தொழில்.
(7) மரப் பெட்டி.
(8) சட்டப் புத்தகம்.

8. ய ர ழ வீறு

ய், ர், ழ் என்ற மெய்யெழுத்துக்களில் முடியும் சொற்களெல்லாம் பெரும்பாலும் மிகும். உதாரணம் :—

(1) நாய்க் கால்; மெய்க் கீர்த்தி.
(2) போய்ச் சொன்னான்; மலர்ச் செடி.
(3) தேர்த் தட்டு; காய்த் தோட்டம்.
(4) யாழ்ப் பாணர்; கூழ்ப் பானை.

9. 'அ' வில் முடியும் வினையெச்சம்

இவ் வினையெச்சத்தை அகர வீற்று வினையெச்சமென்றும், 'செய்' என் வாய் பாட்டு வினையெச்சமென்றுங் கூறுவர். உதாரணம்:—

(1) வரக் கண்டேன்; நீந்தக் கற்றான்.
(2) சொல்லச் சொன்னான்; படிக்கச் சென்றான்.
(3) பேசத் தெரியும்; பாடத் தொடங்கினான்.
(4) ஓடப் பார்த்தான்; செய்யப் போனான்.

10. அந்த, இந்த, எந்த, அப்படி, இப்படி, எப்படி, அரை, இனி, ஒற்றை, இரட்டை, அங்கு, இங்கு, எங்கு, ஆண்டு, ஈண்டு, யாண்டு முதலிய சொற்களுக்குப் பின் க ச த ப மிகும். உதாரணம்:—

(1) அந்தக் காகம்; இந்தக் கரடி.
(2) அப்படிக் கேள்; எங்குக் கற்றாய்?
(3) அரைச் சாப்பாடு; இனிச் செய்யாதே.
(4) ஆண்டுச் செல்; எந்தச் சட்டி?
(5) எந்தத் திருடன்; எந்தத் துடைப்பம்?
(6) இனித் தின்னாதே; அரைத் தொட்டி.
(7) அங்குப் பார்; எப்படிப் படித்தாய்?
(8) ஒற்றைப் பருப்பு; இரட்டைப் பருப்பு.

மற்றவைகளுக்கும் இவ்வாறே உதாரணங் கண்டுகொள்க.

இன்ஸ்பெக்டர்: என்னாங்காணும், உமது பிள்ளைகள் "வாழைப்பழம்" என்பதற்கு "வாயப்பயம்" என்று சொல்லுகிறார்கள்.

உபாத்தியாயர்: என்னங்க செய்வது, அது அவர்களுக்கு பயக்க வயக்கமாக வந்துவிட்டது.

* * *

கட்டுரையாளர்: (ஓர் கட்டுரை எழுதி பத்திராதிபரிடம் கொடுத்து,) இக்கட்டுரைக்கு எனக்கு என்ன சன்மானம் அளிப்பீர்கள்?

பத்திராதிபர்: உயிருடன் இவ்விடத்தைவிட்டு நீர் தப்பிக்க, 2 நிமிஷநேரம் அவகாசம் கொடுக்கிறேன்.

S. E. Arul Raj, *H. I. B*

கிராமக் குடிசைக் கைத்தொழில்.

S. E. Arul Raj, *II. Gr.*

ஒரு கிராமத்திற்கு முக்கிய அம்சம் கிராமவாசிதான். ஆகையால் கிராமவாசியின் முன்னேற்றத்தைக்கருதி எல்லாவித மான பிரயாசைகளும் எடுக்கப்பட வேண்டும். கிராமங்களின் முக்கிய தொழில் விவசாயமே. விவசாய வருமானம் சிலவுக்குக் கட்டவில்லை. கிராமவாசியின் வருமானம் சொற்ப மானதால் அக்கிராமத்தில் கிடைக்கும் சிறுபொருள்களைக் கொண்டு சிறு சிறு குடிசைக் கைத்தொழில்கள் இருப்பது நல்லது. அப்படித் தெரிந்திருப்பதால் வருஷம் பூராகவும் உற்சாகத்துடன் வேலை செய்வதுடன் கொஞ்சம் செலவுக்கும் பணம் வரும். விவசாயத்தின் வருமானக் குறைவை ஈடுசெய்வ தற்காக அதற்கான அநுசரணையான சிறு சிறு கைத்தொழில் கள் கிராமங்களில் முன்னேற்றமடையவேண்டும்.

தேனீ வளர்த்தல், கோழிப்பண்ணை வைத்தல், பழவர்க்க மரம், செடிகளை வைத்து வளர்த்தல், பழங்களை அறுத்து, ஜேம், ஜில்லி, செய்து புட்டிகளில் அடைத்து அனுப்புதல், நல்ல முறையில் எண்ணெவித்துக்களை ஆட்டி எண்ணெ எடுத்தல், கத்தாழை, சணல், தென்னமட்டை, வாழைமட்டைகளில் நார் எடுத்தல் முதலிய விவசாயத்தை ஒட்டிய தொழில்கள் செய்வ தால் கிடைக்கும் ஊதியம் விவசாயிக்குச் சற்று உதவியாய் இருக்கும். கடலோரத்தில் இருக்கும் கிராமவாசிகள் மீன்களைப் பிடித்து அதிலிருந்து உரம் சேகரித்துப் பல ஊர்களுக்கு அனுப் பலாம்.

இவைகளைத் தவிற, நெசவு, சாயம் பூசுதல், பாய் பின்னு தல், கயிறு திரித்தல், விளையாட்டு பொம்மைகள் செய்தல் முதலிய தொழில்களும் தெரிந்திருக்க வேண்டும். இப்படித் தெரிவது கிராமத்திற்கு அவசியமான தேவையாகக் கருதப்படு கிறது.

பல துறைகளிலும் கிராமவாசி முன்னேற்றமடைவானுனல் கிராமத்தில் பொருளாதாரநிலை தானகவே விர்த்தியடையும். இதற்கு முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது "கல்வியே". இக் கல்வி கற்பதோடு, விசேஷமாக விவசாயத்தைப் பற்றிய பாடத்தை விவசாயி மக்கள் படிப்பது நலம். நம்மில் சிலர் விவ சாயத்திற்குப் படிப்புத் தேவையோ? அநுபோகம் போதாதா

என்பர். விவசாயப் படிப்பால் கொஞ்ச நிலத்தில் கொஞ்ச செலவு செய்து, நன்கு உழைத்து எவ்வளவு அதிக மாசூலை அடைய வேண்டுமோ அவ்வளவும் அடைய வேண்டுமென்று கருத்துக் கொண்டு பல வருட அநுபோகத்தாலும், ஆராய்ச்சியாளர்களாலும் கண்டுபிடிக்கப்பட்ட வழிப் பிரகாரம் நிலத்தை பண்படுத்தும் முறையும், உரம்சேகரிக்கும் முறையும், விதை சேகரித்தலும்—அதை அளவுடன் விதைக்கும் முறையும், பயிர்களுக்கு உண்டாகும் நோய், பூச்சி முதலியவற்றைத் தடுக்கும் முறையும் விவசாயத்திற்கு அநுசரணையான ஆடு, மாடுகளைப் பராமரித்தலும், அவைகளுக்குப் பீடிக்கும் வியாதிகளுக்கு சிகிச்சை செய்யும் முறைகளும், விவசாயத்திற்கு உதவியான உபத்தொழில்கள் அதாவது மேலே கூறியுள்ளயாவற்றையும் நன்கு அறிந்து கொள்வது விவசாயப்படிப்பாகும்.

இப்படி அறிய விவசாயப் பள்ளியில் கிராமத்திலுள்ள மக்களைப்படிக்கச்செய்ய வேண்டும். இப்படிச்செய்வதால் கிராமத்தில் கைத்தொழில் ஓங்கும். கிராமம் தானுக முன்னேற்றமடையும். தேசம் முன்னேற்றமடைய கிராம முன்னேற்றமே முக்கியமானது. இப்படிப் படிப்பதால் வறுமையின்றி வாழ்வர். இந்தியா, கைத்தொழிலில் சிறப்புற்றதாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

(இரு பையன்கள் சண்டை போட்டுக்கொண்டு)

விக்டர்: சார், ஜேம்ஸ், கடித்துவிட்டான்.

உபாத்தியாயர்: டேய் ஜேம்ஸ், ஏண்டா கடித்தாய்?

ஜேம்ஸ்: நேற்று நீங்கள்தானே சார் சீ நாயே என்று சொன்னீர்கள்.

* * *

மகன்: அம்மா, சாப்பிடக் கஷ்டமாயிருக்கிறதம்மா?

தாயார்: மகனே, பெல்டில் ஒன்று அல்லது இரண்டு துவாரம் நீக்கிவிட்டுக்கோடா, நன்ருய் கூடகொஞ்சம் சாப்பிடுவாய்.

D. James *VII Std.*

பாடக் குறிப்பு

(S. Maria Susay Manickam.)

வகுப்பு : III. நேரம் : 30 நிமிஷம்.

பாடம் : இந்து தேச சரித்திரம்—"பத்மினி".

உபகரணங்கள் : பத்மினி, அல்லாவுதீன், பீமசிங்கன், சித்தூர் கோட்டை, பல்லக்கு முதலிய படங்கள். நிலக்கண்ணுடி.

நோக்கம் : சரித்திரக் கதைகள்மூலம் பிள்ளைகளின் பாவனு சக்தியை விர்த்திசெய்யவும், சரித்திரப் பிரசித்திபெற்றவர்களின் நற்குண நற்செய்கைகளைப் பாராட்டி, நல்லொழுக்க பயிற்சி உண்டாக்கவும் **பத்மினி** என்னும் ஓர் ராஜபுத்திரப் பெண்மணியின் சரித்திர வரலாற்றைப் போதித்தல்.

முன்னறிவு : "சம்யுக்தை" யின் சரிதை.

விஷயம்	முறை
பீடிகை : ராஜபுத்திர ஜாதியினர் மிக தைரியமுள்ளவர்கள். ஆண்மையுடன் போர் செய்வார்கள். போர்க்களத்திலேயே மடிவார்களேயன்றி புறங்காட்டியோடார். ராஜபுத்திர ஸ்திரீகள் கற்பைக் காப்பதில் இணையற்றவர்கள். கணவனையே தெய்வமாகப் பாவிப்பவர்கள். கணவனுக்காக மனைவி எதுவும் செய்யத் துணிவாள். கணவன் இறந்தவுடன் தான் நெருப்பில் விழுந்து இறந்துவிடுவாள்.	ஜெயசந்திரன் எந்த ஜாதியைச் சேர்ந்தவன்? அவன் மகள் யார்? அவளின் குணங்கள் என்ன? அவள் பிருதுவியை எவ்வாறு அடைந்தாள்? சண்டையில் அவன் இறந்ததும் அவள் என்னசெய்தாள்? இக் கேள்விகள் மூலம் முன்னறிவைச் சோதித்தல். பின்னர், இந்த ஜாதியைச் சேர்ந்த மற்ருெரு பெண்மணியின் சரிதையைப் படிப்போமெனக் கூறி நோக்கத்தை வெளியிடவும்.

விஷயம்	முறை
புதிய பாடம்: ராஜபுதனத்தில் சித்தூர் பீமசிங்கன் என்ற அரசன் ஆண்டுவந்தான். அவன் மனைவி பத்மினி என்பவள். அவள் அழகு சௌந்தர்யமுடையவள். பதிவிரதைகளுக்குள் சிறந்தவள்.	சித்தூர், பீமசிங்கன், பத்மினி முதலிய படங்களைக் காண்பித்து, இப்பெயர்களைக் க. ப. வில் எழுதவும்.
அச்சமயம் டில்லியை அல்லாவுதீன் என்ற ஓர் கொடிய முகமதிய அரசன் ஆண்டுவந்தான். அவன் எவ்விதத்திலும் பத்மினியைத் தான் மணக்கவேண்டுமென்ற கெட்ட எண்ணம் கொண்டான். உடனே தன் சேனையுடன் சித்தூரைத் தாக்கினான். ஆனால் சித்தூரைப் பிடிக்கமுடியவில்லை. கடைசியில் பீமசிங்கனிடம் சமாதானமாய் "தங்கள் மனைவியின் உருவத்தை ஒரு முறை பார்த்துவிட்டுப் போகிறேன்" என்று கேட்டுக் கொண்டான்.	அல்லாவுதீன் படத்தைக் காண்பித்து, பெயரை க. ப. வில் எழுதவும். சித்தூர் கோட்டை படத்தைக் காண்பித்து விஷயத்தின் ஒவ்வொரு பாகத்தையும் சிறிது விளக்கவும்.
அவ்விதமே பத்மினியின் உருவத்தை ஓர் நிலக்கண்ணாடியில் பார்த்துவிட்டுத் திரும்பும்பொழுது பீமசிங்கன் அவனை வழியனுப்ப வெளியில் வந்தான். அது சமயம் அவனை அல்லாவுதீன் வஞ்சகமாய் சிறைப்படுத்தி, பத்மினி தன் எண்ணத்துக்கு இணங்கினாலொழிய பீமசிங்கன் கொலை செய்யப்படுவான் என்று அல்லாவுதீன் பத்மினிக்கு சொல்லியனுப்பினான்.	விஷயத்திலுள்ளதைத் தெளிவாகவும் உணர்ச்சியுடனும் கூறுக.

விஷயம்	முறை
பத்மினி புத்திக்கூர்மையுடையவளானதால் இதற்குத் தான் சம்மதிப்பதாயும் மூடு பல்லக்கில் 700 தாதிகளுடன் வருவதாயும் தெரிவித்தாள். அல்லாவுதீன் இதை நம்பி சந்தோஷத்துடனிருந்தான். குறித்த தினத்தன்று இரவில் 700 மூடுபல்லக்குகளில் 900 ராஜபுத்திர வீரர்கள் பெண் வேஷம் தரித்து அல்லாவுதீன் தங்கியிருந்த இடத்துக்கு வந்துசேர்ந்தார்கள். பத்மினி பீமசிங்கனை கடைசிமுறையாகப் பார்க்க விரும்புவதாய் அல்லாவுதீனுக்கு செய்தியனுப்பப்பட்டது. அவனும் இணங்கினன்.	இடையில், பிள்ளைகள் எம்மட்டில் அதில் ஈடுபடுகிறார்களெனத் தெரிந்துகொள்ள கேள்விகள் போடவும். அவர்களது அபிப்பிராயங்களைப் பற்றியும் வினவவும். மூடு பல்லக்கைப்பற்றிச் சிறிது கூறவும்.
பத்மினிவேடம் பூண்டிருந்த அவன் மாமன் மகன் சிறையிலிருந்த பீமசிங்கனைத் தப்புவித்து கோட்டைக்குப் போகும்படி செய்தான். உடனே பல்லக்கில் இருந்த வீரர்கள் வெளியில் குதித்து எதிர்பாராதிருந்த முகமதியர்களைத் தாக்கி அவர்கள் தோல்வியுற்று ஓடும்படி செய்தார்கள்.	பல்லக்குகளில் வந்தவர்கள் யார்? அவர்கள் வந்த நோக்கம் என்ன? முகமதிய வீரர்கள் சண்டையை எதிர்பார்த்தார்களா? ஆகையால் ஜெயமடைய முடியுமா? என்ற கேள்விகளைப் போடவும்.
பத்மினியின் சாமர்த்தியத்தையும் பதிபக்தியையும் கண்ட ஜனங்கள் மகிழ்ந்தார்கள்.	இச்சரித்திரத்திலிருந்து பத்மினி எப்படிப்பட்டவள் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

N. B. : விஷயம் இன்னும் விரிவாய் குழந்தைகளுக்கு ஏற்றவாறு சொல்லப்படவேண்டும்.

பரீக்ஷை :—சித்தூரின் அரசன் யார்? அவன் மனைவியின் பெயர் என்ன? அவளை மணக்க விரும்பியவன் யார்? அதற்காக என்ன செய்தான்? அவன் பத்மினியை எப்படிப் பார்த்தான்? பீமசிங்கன் எவ்வாறு கைதியாக்கப்பட்டான்? அவனை மீட்க பத்மினி செய்த சூழ்ச்சி என்ன? அவளுடைய குணாதிசயங்கள் யாவை?

க. ப. சு. :—பீமசிங்கன் சித்தூர் அரசன்.
அவன் மனைவி பத்மினி.
அவளை டில்லி அரசனான அல்லாவுதீன் மணக்க விரும்பினான்.
பீமசிங்கனை வஞ்சகமாய்ச் சிறைப்படுத்தினான்.
பத்மினி தன் கணவனைத் தந்திரமாய் மீட்டாள்.

விடுகதைப் பகுதி

(N. Perianayakaswamy.)

I. வாயில் பற்களுண்டு—கடிக்காது
தலையில் பிராண்டிவரும்—நோகாது
பூச்சியைப் பிடித்துவரும்—கொல்லாது
சூக்ஷமமாய் விடை பகர்வீர்—அது யாது?

II. தலையில் குடுமியுண்டு—மனிதனல்ல
கண்கள் மூன்று உண்டு—சிவனுமல்ல
தேகமெல்லாம் ரோமமுண்டு—குரங்குமல்ல
உடைத்தால் பருப்பிருக்கும்—கொட்டையுமல்ல
உருக்கினால் நெய்வடியும்—வெண்ணெயுமல்ல.
இது என்ன?

182295

காற்ருேட்டமில்லாத பாடசாலே

"அம்மா."

"ஏண்டா கண்ணு."

"பக்கத்திலேயே இரு அம்மா."

"ஒரண்டையும் போகலே ராஜு."

"மருந்து போட்டிடுறியே."

"இனிப்போடமாட்டேன் அப்பா."

நான்கு வருஷங்களுக்கு முன்னமே பள்ளிக்கூடத்திலிருந்து வந்தபோதெல்லாம் ராஜு, "நெஞ்சு வலிக்கே, தலே நோகுதே," என்று அம்மாவிடம் சொல்லுவான். ஆனல் அவள், "உனக்கு நித்தம் இந்தப் பல்லவிதான். வடை சுட்டு ஜன்னலில் வச்சிருக்கேன். தின்னு போ," என்று சொல்லி விடுவாள். அவனும் குஷாலாய்ப்போய் வடையைப் புசித்து ஒரு குதிகுதித்து விளேயாடப்போய்விடுவான்.

ஆனல் இப்போது காரியம் விபரீதமாகிவிட்டது. மூன்று மாதங்களாய் அவன் படுக்கையும் பாயுமாய்விட்டான். உணவு அவன் கண்ணில்பட்டு நாள் நாற்பதுக்கு மேலிருக்கும். இளேத்து இளேத்து உடல் ஈர்க்குப்போலாகிவிட்டது. அவனுல் எழும்பவும் முடியவில்லே; நடக்கவும் முடியவில்லே.

ஸரஸா வந்து அவனே உற்று நோக்கினுள். பயமும் திகிலும் அந்தப் பார்வையிலே விளங்கியது. அவன்மேல் கையை வைத்தாள். அவளால் சகிக்கமுடியவில்லே உஷ்ணத்தை. "ஐயோ! நீங்கள்தான் வாங்களேன்! என் செல்வமே! என் கண்மணீ! உன்னே மறந்து நான் எப்படியடா இருப்பேன்!"

ரங்கராஜ் வந்து மகன் மேனியைத் தொட்டுப்பார்த்தார். அவர் மனம் திடுக்குற்றது. "ஸரஸா, கொஞ்சம் பார்த்துக் கொள். இதோ வைத்தியரை அழைத்து வருகிறேன்," என்று விரைந்தார். நான்கைந்து நிமிஷங்கள்கூட ஆகவில்லே; ஓர் வைத்தியர் உள்ளே வந்தார்.

வைத்தியர் நாடியைச் சோதித்தார். அவர் மனம் கலங்கினது. முகம் வாடியது. நம்பிக்கை அவரிடமில்லே. "ஐயா,

வியாதி உச்சஸ்தாயியை அடைந்துவிட்டது. நான் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. பக்கத்திலிருக்கும் ஆஸ்பத்திரிக்கு உடனே கொண்டுபோங்கள். கடவுள் மனமிரங்கினுல்.........!

“ஹா என் மகனே! ராஜு! இதற்காகவா நான் உன்னைப் பெற்றேன்! இந்த நிலைமையில் உன்னைப் பார்க்கவா வளர்த்தேன்! என் கட்டிக்கரும்பே!” என்று ஸரஸா புலம்புவதற்குள், வண்டி ஒன்று வாசலில் நின்றது. ரங்கராஜ் உள்ளே வந்தார். தம் ஏக குமாரனை, தம் வாழ்வின் ஜீவநாடியான மகனை, தம் சந்தோஷத்தின் மூலகாரணமான கண்மணியை இரு கரங்களாலு மெடுத்து, மார்புடனணைத்து வண்டிக்குட் சென்றுர். ஸரஸா அவனைத் தன் மடியிற் கிடத்திக்கொண்டாள்.

வண்டி ஓடிக்கொண்டிருந்தது. ஸரஸாவின் மனம் கலக்கத்தால் பிளந்துவிடும்போலிருந்தது. அவள் பார்வை முற்றும் ராஜுவின் மீதுதான். “ஹா என் குலக்கொழுந்தே! என் மடியிலிருக்கும் என் கண்ணே! உன்னை நான் பறி கொடுக்கவோ! உன்னைப்பிரிந்து நான் உயிர் வாழவோ! வகுப்பில் முதல் என்று கேள்விப்பட்டு மூன்று மாதங்கள்கூட ஆகவில்லையே! என் எண்ணமெல்லாம் பாழானதே! உலகோர் என்னை ஏசுவார்களே! நீ மாளவும் நான் வாழவுமா!” என்று நினைத்து உருகினுள். துக்கத்தின் அலைகள் அவள் இருதயச்சுவரில் ஒன்றன்பின் ஒன்றுய் மோதின. அவளால் பேச முடியவில்லை. திகிலும் நிர்ப்பந்தமும் அவள் கண்களினின்றும் கண்ணீராய் வெளி வந்தன. ஹா! வாழ்வே!

ஆஸ்பத்திரி வந்துவிட்டது. வண்டி அங்குச் சென்றது.

யமவாதை

ரங்கராஜ் டாக்டரிடம் பையனைக்காட்டினுர். டாக்டர் பல முறை அவனைச் சோதித்தார். வரவர அவர் முகக்களை குறைந்துகொண்டே வந்தது. “ஐயா, பையனுக்குக் கபவாத ஜுரம் 105° வீசுகிறது. மேலும் அதிகரித்துக்கொண்டே போகிறது எல்லாத்துக்கும் ஈசன் இருக்கிறுர்,” என்றுர்.

ரங்கராஜ்: “டாக்டர் ஸார். நீங்கள் நினைத்தால் அவனுக்கு உயிர் கொடுக்க முடியும். நான் குபேரசம்பத்துடையவனல்ல. எனினும் நீங்கள் என்ன கேட்டாலும் தருகிறேன். என் கண்மணிக்கு உயிர் கிடைத்தால்போதும்.”

டாக்டர்: "பையனுக்கு லங்ஸ் ரொம்ப வீக்காயிருக்கிறது. நரம்புகள் தளர்ந்துவிட்டன. நீங்கள் அவனைக் காற்ரோட்டமில்லாத இடத்தில் வளர்த்திருக்கவேண்டும். அதனுல்தான்."

ரங்கராஜ்: "அப்படியொன்றுமில்லையே. என் வீடு மைதானத்திலல்லவா இருக்கிறது. என் கண்மணீ!"

டாக்டர்: "பின் அவன் என்ன செய்தான். எங்கே?

ஸரஸா: ஹா! அந்தப் பள்ளிக்கூடம்! அந்தப் பாழாய்ப் போன பள்ளிக்கூடம்! ஒரு ஜன்னல்கூட அதிலில்லையே!"

வருந்தி வருந்தி என்ன பயன். ராஜுவுக்கு கையும் காலும் வெட்டி இழுக்கிறது! சுவாசம் கஷ்டமாகிவிட்டது! நெஞ்சு குவிந்து முகம் வெளுக்கிறது! சுவாசம் திண்டாடும்போது உடலை வளைத்து பயங்கர சத்தம் தொனிக்கிறது. கண் விழிகள் சுழல்கின்றன. ஒரே மகன்! அவனுக்கு ஏதும் நேர்ந்தால் அப்பா, அம்மாவின் கதி என்ன?

டாக்கர் ஊசிக்குமேல் ஊசி போடுகிருர். விதவிதமான மருந்துகளை பிரயோகிக்கிருர். எதற்காக?

பையனுக்கு மிக நெருக்கடி. மூச்சுத்திணறுகிறது. விழிகள் சொருகுகின்றன! அவன் ஜீவிப்பது சந்தேகம்.

டாக்டர், ரங்கராஜ், ஸரஸா மூவரும் ராஜுவையே பார்க்கிருர்கள். அவன் விழிகள் மேலேயே பார்க்கின்றன. அவன் பிழைப்பானு?

அது பிஞ்சிலேயே ஊட்டப்பட்ட நஞ்சு. இளமையிலேயே அவன் உயிரில் கலந்த பாஷாணம். அது முற்றிவிட்டது. அதற்கு மாற்று இல்லை. தன் வேலையை அது செய்தேதீரும்.

ஐயோ! ஐயோ! (அந்தப்பாடசாலையில்) இரண்டு ஜன்னல்களேனுமிருந்திருந்தால்!.........

சிறுவர்களுக்கான கதைகள்

V. M. Sammanasu

சிறுவர்களுக்குக் கதை கேட்பதில் விசேஷ பிரியமுண்டு. அதில் அவர்களுக்குச் சலிப்பே ஏற்படுவதில்லை. நல்லவிதமாகக் கதைகளைச் சொல்லும் திறமை ஆரம்ப ஆசிரியர்களுக்கு இன்றியமையாததோர் யோக்கியதாம்சமாகும். ஆயினும் கதைகளைச் சொல்லும் விதமேயன்றி, கதையானது தன்னிலேயே பிள்ளைகளால் ரஸிக்கப்படத்தக்கதாயிருப்பது அவசரம். சாதாரணமாக நமது பள்ளிகள் யாவற்றிலும் ஏறக்குறைய ஒரேவிதமான கதைகளே வழங்கப்பெறுகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. உலக இயல்பில் 'மாறுதல்' ஓர் அம்சம். அது போலவே, கதையுலகிலும் அடிக்கடி 'மாறுதல்கள்' அவசியம்; அதிலும் குழந்தைகளுக்கு மகா அவசரம். ஆகவே, ஆரம்ப ஆசிரியர் அநேகாநேக கதைகளைத் தெரிந்து வைத்துக்கொண்டு சமய சந்தர்ப்பங்களுக்கேற்றாற்போல் அவைகளை உபயோகிப்பது நன்மை பயக்கும். இத்தகைய கதை வரிசைகள் இத்தலைப்பில் வெளிவரும்.

1. ஜிலேபிக்கதை (Adapted)

ஒருநாள் ஒரு பாட்டி ஜிலேபி சுட்டுக்கொண்டிருந்தாள். அதில், ஒன்று, மற்றவைகளைக்காட்டிலும் அதிக வாய்ப்பாக அமைந்தது. பாட்டி அதைப் புகழ்ந்துகொண்டே எண்ணெய்ச் சட்டியைவிட்டு எடுத்துப் பாகுத்தட்டில் போடப்போனாள். ஆனால், அந்த ஜிலேபி பாகுக்குள் விழாமல் தவறிக் கீழே குதித்தது. பாட்டி எடுக்கச்சென்றாள். ஜிலேபி ஓட ஆரம்பித்தது. தன்னுடைய பிள்ளைகளைக் கூப்பிட்டு ஜிலேபியைப் பற்றிவரச் சொன்னாள் பாட்டி. அவர்கள் ஓடியும், முடியவில்லை. பாட்டி தாத்தாவை அனுப்பினாள். அவரும் ஓடிப்பார்த்தார், ஜிலேபி அகப்படாமல் அவர்களை ஓடவைத்துக்கொண்டே தானும் ஓடிற்று. ஓடும்பொழுது பின்வருமாறு பாடிற்று.—

நான் ஒரு ஜிலேபி;
நல்ல நல்ல ஜிலேபி;
வட்டமான ஜிலேபி;
வளையமுள்ள ஜிலேபி;
ஆடிப் பாடுவேன்;
ஓடிப் போகுவேன்;
பாருங்கள்—வாருங்கள்;
பிடியுங்கள்—பார்க்கலாம்.

ஜிலேபி மேலும் ஓடவே, எதிரில் வந்த ஒரு சேவலைச் சந்தித்தது. ஜிலேபியைப்பார்த்த சேவல்,

"கொக்கரக் கோ, கோ......
ஜிலேபி, ஜிலேபி, ஓடாதே;
சும்மா நில்லு பாயாதே;
உன்னை இன்று நானே
உண்டு தீருவேனே."—எனக் கூவிற்று.

உடனே ஜிலேபி முன்னாலே பாடிய பாட்டைத்தானே பாடிக்கொண்டு வேகமாக ஓடிற்று. (பாட்டைத் திரும்பவும் சொல்லவும்.)

வழியில், ஒரு வாத்தைச் சந்தித்தது. உடனே, வாத்து,

"க்வாக், க்வாக்;
ஜிலேபி, ஜிலேபி, ஓடாதே;
.... எனச் சப்தமிட்டது.

ஜிலேபி திரும்பவும் பழைய பல்லவியையே (திரும்பச் சொல்லவும்) பாடிக்கொண்டு தப்பியோடிற்று.

மூன்றாவதாக ஒரு பசுவைக் கண்டது. உடனே, பசு,

"மா ஆ ஆ..................
ஜிலேபி, ஜிலேபி, ஓடாதே;
..........................எனக் கதறிற்று.

ஜிலேபி தன் பாட்டைப் பாடிக்கொண்டு (திரும்பச் சொல்லவும்) அகப்படாமலே ஓடிவிட்டது.

நான்காவதாக, ஒரு குதிரை; ஐந்தாவது ஒரு கழுதை; ஆறாவது ஒரு ஆடு—(இப்படியே சமயத்திற்குத் தகுந்தாற் போல சேர்த்துக்கொள்ளவும்.)

கடைசியாக, ஜிலேபி ஒரு நரியின் முன்பாக வந்தது. நரியோ தந்திரமுள்ள பிராணி. ஆகையால் அது ஜிலேபியைப் பயமுறுத்தவில்லை. வெகு பக்ஷமாகப் பேசி அழைத்துக் கொண்டே சென்றது. வழியில் ஒரு நீரோடை குறுக்கிட்டது. ஜிலேபி அதை எப்படிக் கடப்பதென்று தெரியாமல் விழித்தது. நரி, ஜிலேபியைத் தேற்றி, "நீ என் வால்மீது ஏறிக் கொள், நான் உன்னை நனையவிடாமல் அக்கரை சேர்க்கிறேன்" என, ஜிலேபி, "நல்லது" என்று ஏறிக்கொண்டது. நரி நீரில் இறங்கிற்று. சிறிது ஆழம் சென்றதும், நரி தந்திரமாக ஜிலேபியைத் தன் முதுகில் ஏறச்சொன்னது. அதுவும் அப்படியே

செய்தது. பிறகு, நரி இன்னும் ஆழத்தில் சென்று, தன் தலையில் ஏறிக்கொள்ளச் செய்தது. பாவம், ஜிலேபி, ஒன்றும் தெரியாமல் நரியின் தலையில் ஏறிக்கொண்டது. சற்றுநேரங் கழிந்ததும், தன் தலை நனையப்போவதாகப் பாசாங்கு செய்து கொண்டே நரி, "ஜிலேபி, நீ நனையாமல் இருக்கவேண்டுமானால், என் வாய்க்குள் வந்துவிடு; நான் உன்னைப் பத்திரமாகக் கரை சேர்க்கிறேன்" என்றது. ஜிலேபியும், கபடு ஒன்றும் அறியாததால், நரி வாயினுள் செல்ல, அது ஜிலேபியை விழுங்கிவிட்டது. ஐயோ, பாவம்!

(இவ்விதக் கதைகளில் நீதி போதனையை வற்புறுத்தாமல் பிள்ளைகளுடைய ரஸிகத் தன்மையையும், ரூபிகா சக்தியையுமே விருத்திசெய்யப் பார்க்கவும்.)

பெற்றோர் சங்க திறப்பு விழா

M. Arokiasamy.

கும்பகோண மேற்றிராசன ஆட்சிக்குட்பட்ட வடுகர் பேட்டை பங்கைச் சேர்ந்த கல்லக்குடி R. C. ஆரம்ப பாடசாலையில் 9—10—40-ல் புதன்கிழமை மாலை $2\frac{1}{2}$ மணிக்கு பெற்றோர் அனைவரும் திரளாகக் குழுமி, மாணவ, மாணவிகள், ஆனந்தமாக வரவேற்பு கூற, வடுகர்பேட்டை உதவி பங்குக்குரு சங். M. S. அந்தோனிநாதசுவாமி அவர்கள் தலைமைவகிக்க சிறுவர் நல்வரவு கீதங்களையும், கோலாட்டம், கும்மி, இன்னும் பல்வேறு கீதங்களையும் பாடி மலர் மாலை சூட்டினர்.

பின்னர், கோவண்டாகுரிச்சி R. C. ஸ்கூல் தலைமை ஆசிரியர் அவர்கள் சங்கத்தின் நோக்கத்தைப்பற்றியும் பெற்றோரும பாடசாலையும் என்பதைப்பற்றியும் வெகு விமரிசையுடனும் உற்சாகத்துடனும் ஓர் உன்னத சொற்பொழிவு செய்தனர். பெற்றோரும் பாடசாலையும் என்பதற்கொப்ப ஓர் சிறு நாடகம் 4-ம் 5-ம் வகுப்பு மாணவி, மாணவர்களால் அதிகத் திறமையுடன் நடித்துக்காட்டப்பட்டது. பின், முதல் மூன்று வகுப்பு பாலர்கள் அபிநயப்பாடல்களையும் பாடி, அனைவரையும் குதூகலிக்கச் செய்தனர்.

இறுதியாக, தலைவர் அவர்கள் பாலர் கல்வியைப்பற்றியும், சர்க்கார் புது அறிக்கைகளையும், பெண் கல்வியைப்பற்றியும்

வெகு விளக்கமாக எடுத்துரைத்தனர். பின்னர் ஷை பாட சாலைத் தலைமையாசிரியர் அனைவர்க்கும் நன்றிகூறியவுடன் பெற்றோர் சங்க உத்தியோக நிர்வாகிகள் நியமனம் முடிந்ததும் பாப்பாண்டவர் வாழ்த்து, இராஜ வாழ்த்துடன் ஷை விழா நிறைவெய்தியது.

குறிப்பு:—சாத்தூர் ரேஞ்சு மார்தான் கோவில்பட்டி, R. C. ஆரம்பப் பாடசாலையில் "பெற்றோர் விழா" சிறப்பாய் நிறைவேறிய தைக் குறித்து ஷை பாடசாலை ஆசிரியர் V. ராஜேந்திரம் அவர்கள் அனுப்பியுள்ள விவரம் அறிந்து எமது சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

(பத்திராதிபர்)

உழவின் பெருமை

S. Arokiasamy, *H. Gr.*

நொண்டிச்சிந்து மெட்டு.

உழவே! உன் பெருமை—எடுத்து
உரைக்கவும் கூடுமோ இவ்வுலகமதில்.
நன்றாய் விளையச் செய்வாய்—உழவே
நாடு நலம் பெறவே நன்மை புரிவாய்.
சோம்பலென்பதை ஓட்டுவாய்—உழவே
சுறுசுறுப்பெனும் புண்யந்தனை நாட்டுவாய்.
தானியமணி தருவாய்—உழவே
தரித்திரமதைப் போக்கி தனம்தருவாய்.
பழவர்க்கம் நீ தருவாய்—உழவே
பாரோர் மகிழ்ந்துவாழ பலனளிப்பாய்.
காய்கறிதனை ஈவாய்—உழவே
கஷ்டத்தைப் போக்கி சுகம் நீ தருவாய்.
திரவியம்தனை தருவாய்—உழவே
திருப்தியாய் வசித்திட திடம் தருவாய்.
மக்களை ஆதரிப்பாய்—உழவே
மாபஞ்சம்தனை நீக்கி மகிழச்செய்வாய்.
எங்கட்கு தந்தை தாய் நீ—உழவே
நீ இல்லாவிடில் எங்கள்பாடு அந்தரமே.
பூலோக மானிட ரே—உழவின்
பெருமையதையுணர்ந்து தொழில் புரிவீர் (உழவே.)

தேனீ வளர்த்தல்

தேனீ வளர்த்தலானது மிகவும் சுலபமானது. இத் தொழிலை ஜீவனத்தொழிலாகவும், உப தொழிலாகவும் வைத்துக்கொள்ளலாம். தேனீக்களில் பல வகைகள் உண்டு. அவை யாவன :—மலந்தேனீ, கொம்பந்தேனீ, தொடுதேனீ, பொந்தந் தேனீ, கொசுவந்தேனீ. இவைகளில் நாம் வளர்க்கக்கூடியது **பொந்தந்தேனீயே.** ஏனென்றால் மற்ற தேனீக்களெல்லாம் வெட்ட வெளியில் மரங்களில் தொங்கும். ஆனால் பொந்தந் தேனீ மரப்பொந்து, மலையிலுள்ள புடை, சுவர் பொந்து முதலிய மறைவான இடங்களில் வசிக்கும். அதனால்தான் இவைகளைக் கூடுகளில் வளர்க்க முடிகிறது.

கூட்டின் விவரம் :—இக்கூட்டில் மூன்று தட்டுகள் உண்டு. ஒவ்வொரு தட்டிலும் 7 சக்கைகள் (பிரேம்) உண்டு. இதில் அடித்தட்டும் அதிலுள்ள சக்கைகளும் பெரிதாகவும், மற்ற இரண்டு தட்டுகளும் அதிலுள்ள சக்கைகளும் சின்னதாகவும் இருக்கும். பெரிய தட்டாகிய அடித்தட்டில்தான் தேனீ முட்டையிட்டு அதிலிருந்து குஞ்சுகள் உண்டாகி இன விர்த்தியாகும். மற்ற இரு தட்டுகளிலும் நிறையத் தேனைத்தான் அடைக்கும்.

ஈ பிடிக்கும் விதம் :—பொந்தந் தேனீ மரப்பொந்திலிருந்தால், உடனே மறுபுறம் அல்லது அத்துவாரத்திற்குப் பழைய துவாரத்திற்கு நேரே மேலாக ஒரு துவாரம் செய்யவேண்டும். பின்பு கீழ்த்துவாரத்தில் புகைகாட்டினால், ஈக்கள் தட்டைவிட்டு விலகும். உடனே நாம் அத்தட்டை மெதுவாக, கசக்கிவிடாமல் எடுத்து மேற்சொன்ன குஞ்சுத்தட்டிலுள்ள சக்கையில் கட்டி அத்தட்டில் தொங்கவிடவேண்டும். பொந்திலுள்ள குஞ்சு ராட்டுகளையெல்லாம் குஞ்சுத்தட்டிலுள்ள 7 சக்கைகளிலும் கட்டலாம். பின்பு அந்தக் கூட்டை மேற்துவாரத்தோடு சேர்த்துப் பிடிக்கவேண்டும். பின்பு பொந்திலுள்ள எல்லா ராட்டுகளையும் எடுத்துவிட்டு இலேசாகப் புகையைக் காட்டினால் ஈக்கள் எல்லாம் மேல் துவாரத்தின் வழியாக வெளிக்கிளம்பும்; அவைகளில் சிலது நாம் பிடித்திருக்கும் கூட்டினுள் செல்லும், சிலது வெளியே செல்லும். இவ்விதம் இருக்கும்பொழுது ராணி ஈயானது கூட்டினுள் சென்றுவிட்டால் மற்ற ஈக்கள் எல்லாம் தானே சென்றுவிடும். சில சமயங்களில் ஈக்கள் ஒன்றுகூட கூட்டினுள் செல்லாது. அப்பொழுது ஈக்களை

எல்லாம் வெளியில் கலைத்துவிட்டபின்பு அவைகள் எங்கே தொங்குகிறது என்று கவனிக்கவேண்டும். அவ்விதம் அவைகள் மரக்கிளையில் தொங்கும்பொழுது, கூட்டைக் கொண்டு போய் அவைகள் தொங்குகிற கொப்போடு சேர்த்து வைத்து லேசாகப் புகையைக் காட்டினல் கூட்டினுள் ஏறிவிடும்.

இதுதவிர இன்னொருவிதமாகவும் பிடிக்கலாம். அதாவது: மரப் பொந்திலுள்ள கீழ்த்துவாரத்தில் புகையைக் காட்டி, மேல் துவாரத்தில் வலையைப் பிடிக்கவேண்டும். அவ்வலையின் கண்கள் ராணி ஈ தவிர மற்ற ஈக்கள் நுழைந்து போகக்கூடியதாயிருக்கவேண்டும். இவ்விதம் பிடித்தால் ஈக்கள் எல்லாம் வெளியே போய்விடும். ஆனல் ராணி ஈ மாத்திரம் பெரிதாயிருப்பதால் வலையில் தங்கிக்கொள்ளும். அப்பொழுது அதைப் பிடித்து இரக்கையைக் கொஞ்சம் கத்தரித்துப் பின்பு மேற்சொன்ன கூட்டில் வைத்தால் மற்ற ஈக்கள் எல்லாம் தானுகவே கூட்டிற்கு வந்துவிடும்.

பாதுகாக்கும் விதம்:—இவ்விதம் (3 மைலுக்கு அப்பாலிருந்து) பிடித்துவரும் ஈயை கூட்டில் ஒரு ஈயாவது வெளிப்போகாமல் அடைத்துவைத்து, எறும்பு செல்வதற்கு வழியில்லாமல் தொட்டிகட்டி, அதில் நீர்விட்டு, நடுவில் ஒரு கோல் அல்லது இரும்புக் கம்பி நட்டு அவ்விரும்பின்மேல் ஒரு பலகையை அசையாமல் மாட்டி அதன்மேல் இக்கூட்டை வைத்து இரவில் 8 அல்லது 9 மணிக்கு கூட்டைத் திறந்துவிடலாம். விடிந்தபின்பு கருப்பட்டிப்பால் அல்லது சீனிப்பால் அதற்கு ஆகாரமாக ஒரு சிறு வசியில் வைக்கவேண்டும். ஏனென்றால் அக்கூடு இருக்கும் இடம் ஈக்களுக்குப் புது இடமாயிருக்கிறபடியால் உடனே தேன் எடுக்கச் செல்லாது. ஒருநாள் அல்லது இரண்டு நாட்கள் கழித்து தேன் சம்பாதிக்க ஆரம்பிக்கும். அப்பொழுது நாம் வைக்கும் கருப்பட்டிப்பாலை நிறுத்திவிடலாம்.

இவ்விதம் பிடித்துவந்த ஈக்கள் சில தடவையில் ஓடிப்போவதுண்டு. சாதாரணமாக இது காலை 8 மணி முதல் 9 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் 6 மணி வரையிலும் உள்ள நேரங்களில்தான் வெளியேறும். அந்நேரங்களில் நாம் கொஞ்சம் கவனமாக இருந்து வெளிச்சென்றால் மேற்கூறிய பிரகாரம் பிடித்து வந்து வைத்து அன்று முழுவதும் அடைத்துவைத்து இரவில் திறந்துவிடவேண்டும். இக்கூடு நன்றாக வேலை செய்யத் தொடங்கிவிட்டதென்றால் நாம் வாரத்திற்கு இருமுறை

யாவது கூட்டைத் திறந்து ராட்டுக்குக் கட்டியுள்ள ஒவ்வொரு குஞ்சுச் சக்கையையும் தூக்கிப்பார்த்து அவைகளில் ராணி ஈயின் செல் இருந்தால் அதைக் கத்தரித்து எடுத்துவிடவேண்டும். இவ்வித ராணி ஈ செல் ராட்டின் அடியில் பெரிய செல்லாகவும் கீழ் நோக்கிய வாயை உடையதாகவுமிருக்கும். அவ்விதம் இருப்பதைமாத்திரம் கத்தரித்துவிடவேண்டும். மேற்படி சக்கையில் இடந்தெரியாமல் ராட்டுக் கட்டினபின் ராணிஈ செல் வைக்காது. அவ்விதம் ராணி ஈ செல் உண்டாகிவிட்டால் அதிலிருந்து வரும் ராணி ஈ தன்னோடு சில அலி ஈக்களையும், ஆண் ஈக்களையும் கூட்டிக்கொண்டு பறந்துவிடும். அல்லது இருதிறத்தாரும் சண்டைசெய்து, ஜெயித்தது பழைய கூட்டிலும், தோற்றது வேறொரு இடத்திற்கு பறந்தும் சென்றுவிடும். இவ்விதம் பறந்துசென்றுவிட்டால் ஈக்கள் குறையும். அதனால் வேலை குறைந்து நல்ல பலனைத்தராது. அதனால்தான் இவ்விதம் பிரியாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். சில சமயங்களில் எட்டுக்கால் பூச்சி வலையடிதது ஈக்களையெல்லாம் கொன்றுவிடும். அவ்விதம் சம்பவியாமலும் பார்த்துக்கொள்ளவேண்டும்.

கூட்டிலுள்ள ஈக்களின் வகுப்புகளும் அவைகளின் வேலைகளும் :— ஒரு தேன் கூட்டில் மூன்றுவித ஈக்கள் உண்டு.

(i) **ராணி ஈ :—** இதுதான் அக்கூட்டின்தாய். இது இல்லாவிட்டால் அக்கூட்டினால் பிரயோசனமில்லை. இதன் தொழில் முட்டையிடுதலும், கூட்டை மேல்பார்த்து வருதலும். இது 3 வருஷம் வரை உயிரோடிருக்கும். இது ஒரு கூட்டிற்கு ஒன்றுதானிருக்கும்.

(ii) **அலி ஈ :—** இது வேலைக்கார ஈ. இதன் தொழில் கூடுகட்டல், தேன் சேகரித்தல். ராணி ஈ, மற்ற குஞ்சுகளையும் கவனித்தல், கூட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்ளல், பகைவர்களோடு சண்டை செய்து வெருட்டுதல். இவைகள் ஒரு கூட்டில் அநேகமிருக்கும். ஒரு பெரிய கூட்டில் 3000-ஈக்களுக்கு மேலிருக்கும். இது 6 மாதகாலம் உயிரோடிருக்கும்.

(iii) **ஆண் ஈ :—** இது ஒரு சோம்பேறி ஈ. ராணி ஈ முட்டையிடத் துவக்கும்வரைக்கும்தான் இதனால் பிரயோசனம். மற்ற நாட்களிலெல்லாம் இது சோம்பேறித்தனமாயிருந்து அலி ஈக்கள் சேகரித்துவைக்கும் தேனை குடித்துக்கொண்டிருக்கும். அதனால் நமக்குத் தேன் குறையும். ஆகையால் மாலையில் கூட்டைத் திறந்து தேன் தட்டைப் பார்த்தால் இவைகள்

அதில் நிறையக் காணப்படும். இது மற்ற ஈக்களைவிடக் கறுப்பா யிருப்பதினால் நன்றாக வித்தியாசம் தெரியும். அவ்வித ஈக்களை நாம் கொன்றுவிடவேண்டும். எல்லாவற்றையும் கொன்று விடக்கூடாது. அதிகமாக இருக்கும் கூட்டில் மாத்திரம் இவை களைக் கொல்லவேண்டும். இவ் ஆண் ஈ 3 மாதம் வரையில்தான் உயிரோடிருக்கும்.

தேன் எடுக்கும் விதம்:—முதலில் தேன் ராட்டைச் சக்கையோடு எடுத்து, அதிலுள்ள ஈக்களை புகைகாட்டி ஊதி அவ்விராட்டைவிட்டுப் போக்கி வாழை நாரால் ராட்டு பிய்ந்து போகாமல் சக்கையோடு கட்டி, தேன் எடுப்பதற்கென்று செய் யப்பட்ட மிஷினில் வைத்துச் சுற்றவேண்டும். இவ்விதம் விரை வாகச் சுற்றும்பொழுது செல்களிலுள்ள தேன் செல்களைவிட்டு வடிந்துவிடும். இவ்விதம் எடுக்கப்பட்ட தேனை மிஷினிலிருந்து ஒரு பாத்திரத்தில் எடுத்து அதை கொஞ்சம் சூடாக்கி சுத்த மான துணியால் வடிகட்டி பாட்டிலில் அடைக்கலாம். சூடாக் கினால்தான் துணியைவிட்டு தேன் வடியும், இல்லாவிட்டால் வடியாது.

யோசனுவிருத்திச் செய்யுளின் விடை

(J. Victor Thiagaraj.)

* (கொத்து 31, மலர் 5, 133-ம் பக்கம் பார்க்க.)

நான் கெழுத்தா லானதொரு தமிழினிய பதமதனைத்
தரணியில் தலையான பாவங்களுள் ஒன்றான அகந்தை என்பர்
நான்கெழுத்தில் ஆதியை அகற்றி நோக்கின்
தரித்திரர் தரித்திடும் கந்தை என்பர்
நான்கெழுத்தில் தலையுங்கடையயலும் நீக்கி நோக்கின்
பாட்டிமார் கூறும் கதை என்னும் பதமாம்
நான்கெழுத்தில் கடைமட்டும் பார்க்கின் தக்கதோர்
தமிழ் மாதம் தை என்பதை நேயன் விசுவாசத்தின்
பாடலினால் புகன்றேனே.

* ஷை செய்யுள் விடை கொடுத்த மற்றொரு மாணவர்

A. Alphonse.

ஜுரமுள்ளவனுக்கு ஆகாரம்

(G. M. Rm.)

சகோதரன் ஒருவன் ஜுரம் என்னும் பிணியால் பீடிக்கப்பட்டு வருந்தும்போது ஜீரணக்கருவிகள் சுயசக்தியற்றுப்போக ஜீரண வேலை சரியாய் நடவாமற்போகிறது. ஆகையால் பல ஹீனப்பட்ட அங்கங்களுக்கு அதிக வேலை கொடுக்காவண்ணம் சில ஆகாரங்களைக் கொடுக்கவேண்டும்.

ஜுரங்கள் நமது கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்களால்தான் உண்டாகிறது. இக்கிருமிகளை உடலிலிருந்து போக்கிக்கொள்ள சகோதரனுக்குத் திரவ பதார்த்தங்களையே அதிகமாகக் கொடுக்கவேண்டும். இந்த உதவியால் அவன் பருகின அல்லது போஜனத்துடன் உட்கொண்ட திரவ பதார்த்தங்கள் திரும்பி வெளியே தள்ளப்படும்போது தேக போஷிப்புக்கும், வளர்ச்சிக்கும் அனுவசியமான கழிவுப் பொருட்கள் உடன் கொண்டுவரப்படுகின்றன. சௌக்கியமாயிருந்த காலங்களைப் பார்க்கிலும் ஜுர காலங்களில் அதிகமாய்க் கழிவு பதார்த்தங்கள் தேகத்தில் சேருவதால், திரவ பதார்த்தம் அதிகமாய்க் கொடுக்கவேண்டும். எப்படி குளம், குட்டை, ஆறுகளில் அநேகமாதகாலமாய்ப் படிந்து உறைந்து கிடந்த இலைகள், தூசி, குப்பை முதலியன பெரும் வெள்ளம், பெரும் மழையால் அடிக்கப்பட்டு சுத்தமாக்கப்படுகின்றதோ அதேபோல் அவன் தேகத்தில் உள்ள பலவித விஷங்களைத் திரவ பதார்த்தம் அடித்துக்கொண்டுவரும்.

மேற்சொன்ன விஷயங்களைக்கொண்டு தண்ணீர் அவனுக்கு ஒரு சிறந்த ஔஷதமென்று கொள்ளவேண்டும். மேலும், காப்பித்தண்ணீர், பால், சோடாத்தண்ணீர், பழங்கள் முதலியவற்றில் மிகுதியான பாகம் தண்ணீராகையால் இவைகளைத் தாராளமாய்க் கொடுக்கலாம். ஜுரத்தினால் உடல் கொதிப்பெடுத்து எரிச்சலும் தாகமும் உண்டாகிறபோது மேற்சொன்ன பானங்கள் எல்லாம் தாகத்தை அடக்கிக் குளிர்ச்சியை உண்டாக்குவதுமன்றிச் சிறிது போஷித்து உற்சாகமும் உண்டாக்குங் குணமும் உடையது.

மேலும் பின்வரும் ஆகாரங்களையும் கொடுக்கலாம்.

(1) கோதுமை அரிசிக் கஞ்சி, பார்லிக் கஞ்சி, அரிசிக் கஞ்சி.

(2) முட்டைத்தண்ணீர் (Albumen water). (3) பால்தண்ணீர் (whey). (4) பாலும் முட்டையும். (5) ஸூப்பு or இறைச்சி ரசம்.

நோயாளிக்குப் பாலும் சர்க்கரையும் கலந்த கஞ்சி வகைகள் விரும்பத்தக்கதும் பலமுண்டாக்குகிறதுமான ஆகாரங்களாகின்றன. உரப்பான மசாலை வகைகளைச் சேர்க்கக்கூடாது. பால், சர்க்கரை இஷ்டமில்லையானல் கஞ்சியில் உப்பு சேர்த்துக் கொள்ளலாம்.

கதைப் பாட்டு

சங்கராபரணம் — ஆதி

சா் கா	சா கா	க ப ம க	ரீ ;
கண்ணில்	லாத	ஒருகுரு	டன்
பா பா	ம க ரீ	ப ம க ரி	சா ;
கையிலே	ஒரு	லாந்தரு	டன்

குருடன் விளக்குப் பிடித்தது

2-வது வகுப்பு

கண்ணில்லாத ஒரு குருடன்
கையிலே ஒரு லாந்தருடன்
எண்ணெய்க் குடத்தைத் தலையினிலே
எடுத்துச் சென்றான் இரவினிலே.
வேகமாக நடந்திடவே
விளையாடும் பிள்ளைகள் பார்த்திடவே
ஓகோ! உமக்கோ கண்ணில்லை
உமக்கேன் விளக் கென்றார் சொல்லை,
நன்றாய் குருடன் கேட்டவுடன்
நலமாய் அவர்க்குத் தேட்டமுடன்
என்னருமை மக்களே நீர்
என்மேல் இடறி விழுந்திடுவீர்,
என்ற குருடன் சொல்கேட்டு
ஏகினார்கள் வெட்கப்பட்டு
என்றும் பெரியோர்முன் துணிவாக
எதிர்க்காதிருப்பீர் பணிவாக.

சாரணரது கூடாரவாஸம்

(Scouts' Camp)

(I. Durai Raj, *Secondary Senior*.)

சூரியோதயம்! குளிர்ததும்பும் காலை நேரம்! காலைச் சிற்றுண்டி முடித்து சாரணர் (28 பேர்) அனைவரும் எங்கள் சாரண ஆசிரியர் Mr. Pragasam, B.A., L.T., அவர்கள் உத்திரவுப்படி சாரண உடையணிந்து ஸ்ரீரங்கம் சென்றோம். அங்கு அமையப்பெற்ற சவுக்கார் மண்டபம் ஏற்கனவே எங்களுக்கென்று சித்தம் செய்யப்பட்டிருந்தது. புஷ்களமான தோப்பு அதனழகை பன்மடங்கு அதிகப்படுத்தினது. என்ன வனப்பு! என்ன சிங்காரம்!

அம்மண்டபத்தின்முன் எம் சாரணர் கொடியேற்றி சாரணர் காலைஜெபம் ஜெபித்து பின் சிறிது களைப்பாறினோம். எம் பாடசாலையின் பள்ளிக்கூடத் தினத்தன்று நடாத்திய நாடகத்தில் நடித்த எம் சகோதர மாணவர்கள் எங்களுடன் சேர்ந்திருந்தனர். அவர்களும் விநோத விளையாட்டுகள் விளையாடி எம்மை உற்சாகமூட்டினர்.

Tracking! Tracking என்றொரு குரல் கேட்டது. நாங்கள் எல்லோரும் உடனே ஒன்று கூடினோம். என் நண்பரில் பாதிப்பேர் முன் செல்ல அவர்களிட்ட அடையாளங்களால் அவர்களைக் காண நாங்கள் தொடர்ந்தோம். வீதியனைத்தும் கடந்து தோப்பு, காடு இவற்றிலும் பின்சென்று கடைசியாய் மறைத்து வைக்கப்பட்டிருந்த பொருள்களைக் கண்டுபிடித்து ஜயகோஷமுடன் திரும்பினோம். மற்றும் நீச்சுப் பந்தயத்தில் அவரவர் திறமையைக் காட்டி ஸ்நானம்செய்து திரும்பினோம். நன்றாய் நீச்சம் அடித்து வெற்றிபெற்ற எட்டுபேர்கள் Proficiency Badges-க்கு தெரிந்தெடுக்கப்பட்டனர்.

மதுரமான பகற் போஜனம்! அது முடிந்தவுடன் சிறிது இளைப்பாறினோம். மணி நான்கு அடித்தது. எல்லோரும் ஒன்று கூட ஜில்லா சாரண உதவி கமிஷனர் திரு கிருஷ்ணமாச்சாரியார், B.A., B.L., அவர்கள் எங்களுக்குத் தலைமைவகித்தார். தேவகானமான குரலில் என் சகோதர சாரணர் பாடிய பாட்டுகளுக்கிடையில் கமிஷனர் கூறிய பொன்மொழிகள் இன்னும் என் செவியில் தொனிக்கின்றன. பரோபகாரமே சாரணன் சட்ட

வாக்கியம். பிறருக்குத் தொண்டாற்ற சுயபரித்தியாகம் அத்தியாவசியம். மற்றோர் நமக்குக் கீழ்ப்படியவேண்டுமாயின் நாமும் பெரியோர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டும், என்று கூறி அவர் எங்கட்கு (Tender-foot badges) சாரணச் சின்னம் அளித்தார். எம் தலைமையாசிரியர் Rev. Fr. A. Lourdusamy, B.A., L.T., தங்கள் மதுரவாய் திறந்து அமுதச் சொன்மாரி பொழிந்தருளினர்கள். எங்கள் நன்றியையும் செலுத்த கூட்டம் முடிந்தது.

சூரியஸ்தமனம் ஆனதும் சாரணர்களாகிய யாங்கள் அனைவரும் கூடி பெரியோர் எம்மை சூழ்ந்திருக்க Camp Fire ஒன்று செய்தோம். அப்போது நாங்கள் நடிகையுடன் பாடிய "படகோட்டிகளின் பாட்டு" மிக்க இனிமையுடன் விளங்கியது. மணி 6-30 இருக்கும். எம் சாரணக்கொடியிறக்கி துவஜ வாழ்த்துப் பாட, கூட்டம் கலைந்தது. எம்மோடு வந்திருந்த நடிகர்கள் அளவில்லா ஆனந்தத்தால் பூரித்து அவர்களும் சில இனிய கானங்கள் பாடி பரவசமானர்கள். இவ்வாறு "ஜெய", "ஜெய" வென்ற பேரொலி மண்டபம் எங்கும் முழங்க வெளி வந்தோம்.

தேசிய மார்ச்சிங் பாடல்களைப் பாடிச் சிறிதும் களைப்பின்றி தாய்ப்பாடசாலை அடைந்தோம். ஆனல் எங்களுக்குதவிய ஸ்ரீரங்கத்து ஆசிரியர் தியாகமும், தொண்டும் என் மனக்கண்முன் நிற்கின்றது.

இறுதியாய், கேம்ப் தினத்தன்று, தன் முக்கியமான அலுவல்களையும் பொருட்படுத்தாது, நாள் முழுவதும் எம்மை உற்சாகப்படுத்தும்பொருட்டு எம் மத்தியில் வீற்றிருந்த எம் போதனமுறைக் கழகத்து தலைமையாசிரியரான Rev. Fr. லூர்துசாமி, B.A., L.T., அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த வந்தனம் உரித்தாகுக.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

10—11—40: எமது சாரணர்களது வெளிவாசம் (Scout Camp). இன்று காலை 6-30 மணிக்கு எம் பாடசாலை சாரணர் ஸ்கௌட் மாஸ்டர் திரு. A. D. M. பிரகாசம், B.A., L.T., அவர்களது தலைமையின்கீழ் ஸ்ரீரெங்கம் சமீபம் கொள்ளிடக் கரைக்கு வெளிவாசம் செய்யப் புறப்பட்டனர். ஆங்கு ஸ்கௌட் காலை ஜெபம், அடையாளங்களைக்கொண்டு பாதை கண்டுபிடித்தல் (Tracking), நீந்துதல், சமைத்தல், ஸங்கிதப் பயிற்சி முதலிய அப்பியாசங்கள் நடைபெற்றன.

ஷை ஸ்கௌட் இயக்கங்களில் சாரணர்களை உற்சாகப்படுத்த நம் பாடசாலைத் தலைமை ஆசிரியரவர்கள் விஜயம் செய்திருந்தனர். அன்னவர்க்கு வரவேற்பு உபசரிப்பு நடத்தப்பட்டது. பகற் போஜனம் முடிந்தவுடன் மாலை 4 மணிக்கு ஜில்லா உதவி ஸ்கௌட் கமிஷனர் திரு. கிருஷ்ணமாச்சாரியார், B.A., B.L., அவர்கள் சாரணர்களுக்கு ஓர் சொற்பொழிவு புரிந்ததும் 6 மணிக்கு ஸ்கௌட் விழா தீ (Scout Camp Fire) நடைபெற்றதுடன் வெளிவாச வைபவம் நிறைவேறியது.

11—11—40: நம் மாணவர்கள் வெளிப் பாடசாலைகளுக்குச் சென்று போதனை பயிற்சி பெறும்வண்ணம் அணி வகுத்து அனுப்பப்பட்டனர் (முன் மாதங்களில் நடைபெற்றது போல).

23—11—40: ஸினிமா படக்காட்சி (Cinema Show). பின் வரும் கல்வி சம்பந்தமான படங்களை இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரவர்கள், நம் பாடசாலை ஆசிரியர் மாணவர்கள், மாதிரிப் பாடசாலைப் பிள்ளைகள் ஆகியவர்கள் பார்த்துப் பயன் எய்தும்படி எமது ஸபா மண்டபத்தில் (Assembly Hall) படக்காட்சியை நடத்திக் காண்பித்தனர்:

1. நமது சரீரத்தின் தசைநார்கள், அவற்றின் விதம், அமைப்பு, உபயோகம் முதலியன.

2. கனடா தேசத்தில் ஒருவித மரத்திலிருந்து மரக்கூழ் (wood pulp) தயார்செய்வதும் அதைக் கொண்டு காகிதங்கள் இயந்திர சாலைகளில் செய்வதும், பின்னர் அச்சு இயந்திர சாலைகளில் சமாச்சாரப் பத்திரிகைகள் (News papers) அச்சடிக்கும் விதம் முதலிய காரியங்கள்.

3. சிறுவர்களின் விளையாட்டு. நாய்களைப் பழக்குதலும், நாய்கள் தங்கள் சாமார்த்திய வேலைகளைக் காட்டுதலும்.

28—11—40 : யோகாசனங்கள்—காட்சி. இன்று மாலை பெங்களூர் திரு. C. N. Ramachandra Setty அவர்கள்—யோகாசன தேகாப்பியாசங்களைச் செய்துகாட்டினர். தேகத்திலுள்ள சகல தசைநார்களையும், நரம்புகளையும் பழக்கி வசமாக்கிக் கொள்ளக்கூடிய பற்பல அப்பியாசங்களைச் செய்து காட்டிக்கொண்டே அப்பயிற்சிகளைச் செய்துவந்தால் தலைவலி, வயிற்றுவலி, அஜீரணம், மலச்சிக்கல் முதலிய பல உபத்திரவங்களினின்று தப்பலாம் என ஓர் உபந்நியாசமும் புரிந்து அப்பியாசங்களை வெளிப்படுத்தினர்.

சத்திய போதினி

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் சஞ்சிகை

மாதிரி பிரதி இனும்

நானுவித விஷயங்கள் : தற்கால அரசியல் நிலை, வேத விஷயங்கள், சிறு கதைத் திரட்டுகள், உலக நவீனங்கள், சுகாதாரப்பகுதி, மாதர் பகுதி முதலியன அடங்கிய ஒரு மாத சஞ்சிகை.

சந்தா விவரம்

உள் நாடு	ரூ. 1—0—0
வெளி நாடு	ரூ. 1—6—0

விலாசம் :—

சூப்பேரின்டேன்டேண்டு,

சேயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ்,

திருச்சினுப்பள்ளி.

182295

தயாராகிவிட்டது! தயாராகிவிட்டது!!

உயர்ந்த வேலை! குறைந்த விலை!!

எமது வழக்கமான

செயின்ட் ஜோசப்ஸ்

இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ்

1941-ம் வருஷ மாதாந்தர ஷீட்

காலண்டர்

ஒவ்வொரு அட்டையிலும் கண்களைக் கவரும் மூவர்ணப்படம்.

ஒவ்வொரு ஷீட்டும் மூன்று கலரில் அச்சிடப்பட்டுள்ளது.

காலண்டர் 1 விலை அணா 4 தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

ஒரே தடவையில் 10 காலண்டர் வாங்கினால் 1 காலண்டர் இனாம்.

தமிழ், இங்கிலீஷ் தேதிகளுடன் முக்கிய கத்தோலிக்குத் திருநாட்கள், இந்து, முஸ்லீம் பண்டிகைகளுடன் கூடியது.

வெகு நேர்த்தியான வர்ணங்களால் பார்ப்பவர் கண்களுக்கு நேத்திரானந்த திருப்தியைக் கொடுக்கும்.

ஆர்டருக்கு முந்துங்கள்.

சென்ற வருஷம் ஜனவரி-மீ முதல் வாரத்திலேயே எமது வர்ணக் காலண்டர்கள் செலவாகிவிட்டன. காலதாமதம் செய்து ஆர்டர் அனுப்பின அநேக நண்பர்கள் ஏமாற்றமடைந்தனர். ஆகையால் உடனே முந்திக்கொள்ளுங்கள்.

காலண்டர் ஒன்றின் விலை 4 அணா

தபாற்செலவு பிரத்தியேகம்.

திருச்சினாப்பள்ளி செயின்ட்
ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரசுக்கு எழுதவும்.

READY FOR SALES !

Registers for Elementary Schools

(Prepared according to the New Rules)

		Rs. As. Ps.
Record Sheets	100	0-10—0
Monthly Return Sheet	Each	0—0—3
Stagnation Register Sheet	„	0—0—6
Admission Register (12 pp.)	„	0—3—0
Attendance Register for Masters (12 pp.)	„	0—3—0
„ for Pupils „	„	0—2—6

Please apply to The SUPERINTENDENT,
St. Joseph's Industrial School Press, Trichinopoly.

வெளியாகிவிட்டது !

புதிய பதிப்பு!!!

பிரதாப முதலியார் சரித்திரம்

ஓர் இனிய செந்தமிழ் நாவல்.

370+32 பக்கங்கள் விலை ரூ. 1—2—0.

(தபாற் செலவு பிரத்தியேகம்)

வேண்டியவர்கள் :—

திருச்சினப்பள்ளி
செயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ்
சூப்பெரின்டெண்டுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு ஏற்ற சங்கீத பாட புத்தகங்கள்.

---

1. **பாலசங்கீத வாசகம்**
   முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு ... 0—4—6
2. **பாலசங்கீத வாசகம்**
   ஆசிரியர்களுக்கு ... 0—6—6
3. **கர்னாடக சங்கீத போதினி**
   (முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு ... 0—6—0
4. **கர்னாடக சங்கீத போதினி** (2-ம் பாகம்)
   1 முதல் 5 வகுப்பு கிறிஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0
5. **கர்னாடக சங்கீத போதினி** (3-ம் பாகம்)
   6 முதல் 8 வகுப்பு கிறிஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0

விலாசம் : **A. GNANADICKAM,**
South Indian Music School,
St. Thomas Church Rd.
OOTACAMUND.

THOMAS SPORTS

FIRST ANNUAL DISTRICT
BADMINTON FIVES AND DOUBLES **TOURNAMENTS**

Closing Date :- 20th Dec. 1940.

Only Affiliated Clubs, who have enlisted themselves in The Trichinopoly Badminton Association can take part.

THOMAS SPORTS,
Teppakulam, Trichinopoly

BEST BARGAIN!

SEE QUALITY WITH PRICE

CONSULT OUR RELIABLE HOUSE

FULL TO YOUR SATISFACTION

WEAR SPECTS
TO YOUR
EYE SIGHT & ENJOY.

Visit THE

ROYAL OPTICAL CO.

(REGD.)

(S.I.Ry. Suppliers)
234, Big Bazaar St., TRICHY.

AVOID IMITATION & SAVE YOUR EYES

TRY THE BEST & IGNORE THE REST

TRIAL SOLICITED & BE CONVINCED.

DON'T SPOIL YOUR WATCHES

Watch Repairs Undertaken with Guarantee.

Your Two Things

FOR Photo requirements & Photographs

Can be had from

CHETTIAR PHOTO STUDIO

Pro: A. M. S. CHETTIAR & Co.,
Photographers & Photo goods dealers,
297, Big Bazaar, :: TRICHINOPOLY.

For all your Photo requirements of any make and film or plate developing, Printing, and Enlarging etc., please consult us.

Every day makes you look old. To retain your young memories always don't fail to take your Photos at our electrified studio—(day or night.)

Best Enlargements, Oil colour & Water colour Enlargements, modern portraits, cinema slides in colour or without colour can be done at Moderate Charges.

Our Special Photos for one person:—

1. Cabinet Photo	... ...	Re. 0—8—0
2. Kinds of Postcard Photos...	...	Re. 1—0—0
3. 8½x6½ Enlargement	... ...	Re. 1—0—0

Out-door group Photos will be taken.

மரித்தவர்களை மறவாதிருக்க ஞாபகச்சின்னம்!

பாலிஷ் கற்களில் எழுத்துக்களோடு தங்கள் இஷ்டத்திற்கு சிலுவைகள் பிளான்படி வேலை செய்து அனுப்பப் படும். எமது வேலைப்பாடுகளைப் பாராட்டி சங். கனம். கொலெ சுவாமி அவர்களும், ஆங்கிலேய, தமிழ் கன தனவான்களும் எமக்கு அநேக நற் சாக்ஷி பத்திரங்களும் தங்க மெடல் களும் பரிசளித்திருக்கிறார்கள். மாதா சிலைகளும், கத்தோலிக்கு தேவாலய பலிபீடங்களும், பிரான்ஸ், இத்தாலி தேசங்களின் வேலைப்பாடுகளுக்கு சமத்துவமாக குறைந்த செலவில் திருப்திகரமாக செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு: M. I. துமரசாமி அன் சன்ஸ், கருங்கல் பாலிஷ் வியாபாரிகள், மேட்டு தெரு, உறையூர், திருச்சினாப்பள்ளி.

சிறுவர் அறிவுக் கதிர்

ESTD 1935

CHILDREN'S MAGAZINE

சிறுவர்களுக்கேற்ற சிறந்த மாதப் பத்திரிகை
வருட சந்தா உள்நாடு 12 அணா வெளிநாடு 1½ ரூ
டிபாஸிட் கட்டும் ஏஜண்டுகள் எங்கும் தேவை
சிறுவர் அறிவுக் கதிர் ஆபீஸ் ஈரோடு, S.I.RY.

"ஆரம்பக்கல்வி"

சுமார் 5 வருட காலமாக ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத் துக்கு உழைத்துவரும் ஓர் மாதாந்தரப் பத்திரிகை.

இதில் பாடசாலைகள் சம்பந்தமான அரசாங்க உத்தரவுகள், டைரெக்டர் சுற்றறிக்கைகள், கெஜட்டில் பிரசுரமாகும் கல்வி சம்பந்த மான செய்திகள், ஆசிரியர்களுக்கு மிக்க உபயோகமான பொதுச் செய்திகள், கட்டுரைகள் வெளிவரும்.

வருட சந்தா ரூ. 1—0—0. மாதிரிப் பிரதி இனாம்.

ஆரம்பக்கல்வி ஆபீஸ், 94, 95, புதுத்தெருவு, மண்ணடி, மதராஸ்.

Reg. No. M. 1354.

THOMAS SPORTS

Pro: I. PONNIAH PILLAI]

CLIVE'S HOUSE, TEPPAKULAM P. O.,

TRICHINOPOLY



OFFICIAL STOCKISTS FOR:

SLAZENGER'S Ltd.

LONDON.

The CHEAPEST HOUSE FOR:

Spalding Australian Dunlop
American Fulcrum & Japan

TENNIS FRAMES

WE UNDERTAKE

RE-STRINGING REPAIRING
RE-SHAPING & REGLUEING

WE MANUFACTURE THE BEST & GUARANTEED

NETS, BADMINTON BALLS

IN ANY COLOUR
IN ANY WEIGHT

A TRIAL IS SOLICITED

Your best Selection may be made at our Show Room.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.